**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-11012026-11254

Volume: 11

Issue: 1

Month: July

Year: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 02.05.2026

Accepted: 15.06.2026

Published: 01.07.2026

Citation:
Ganthimathi, R. (2026). Agricultural Tools and Farming Occupation in the Ezhuppathu Literature. *Shanlax International Journal of Tamil Research, 11*(1), 57–61.

DOI:
https://doi.org/10.34293/tamil.v11i1.11254

*Corresponding Author:
rgmathi1979@gmail.com

CC BY SA

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Agricultural Tools and Farming Occupation in the Ezhuppathu Literature

**R. Ganthimathi**
*Assistant Professor, Department of Tamil*
*Mazharul Uloom College (Autonomous), Ambur*
*http://orcid.org/0000-0002-8598-5261*

**Abstract**

*This research article, titled "Agricultural Tools and Farming Practices in the Ezhuppathu Literature," concerns a work composed by Kambar in the 12th century CE. Kambar, who created the Kamba Ramayanam with numerous qualities that enhance its literary flavor, has also recorded the excellences of farming in the Ezhuppathu literature. It describes the tools used from the beginning to the end of agricultural work, the methods of using them, the special contribution of farmers (Vellalars) to the growth of prosperity in the world through the profession of farming, the flourishing of moral conduct, and the excellent flourishing of arts such as literature, music, and drama, among other things.*

***Keywords:*** *Kambar, Ezhuppathu, Agriculture, Farming Tools, Farming Occupation, Criticism, Chirrilakkiyam.*

## References

1. Kadhir Murugu, Er Ezhuputhu, Chennai, Saradha Padhippagam, 2007.
2. www.wikipedia.com

# ஏரெழுபது இலக்கியத்தில் உழவுக் கருவிகளும் உழவுத் தொழிலும்

***இரா. காந்திமதி***
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
மஜ்ஹருல் உலூம் கல்லூரி (தன்னாட்சி), ஆம்பூர்

***ஆய்வுச் சுருக்கம்***
*ஏரெழுபது இலக்கியத்தில் உழவுக் கருவிகளும் உழவுத் தொழிலும் என்னும் இந்த ஆய்வுக் கட்டுரை கிபி 12ஆம் நூற்றாண்டில் கம்பர் படைத்ததாகும். கம்பராமாயணத்தில் சுவை ஊட்டும் பண்புகள் பலவற்றையும் கொண்டு காப்பியம் படைத்த கம்பர் உழவுத் தொழிலில் சிறப்புகளை ஏரெழுபது இலக்கியத்தில் பதிவு செய்துள்ளார். ஏரெழுபது உழவுத் தொழிலின் தொடக்க நிலையிலிருந்து இறுதிவரை பயன்படக்கூடிய கருவிகள், அவற்றைப் பயன்படுத்தும் முறை, வேளாளர்களின் சிறப்பு, உழவுத் தொழிலால் உலகில் வளம், பெருகுதல், ஒழுக்கம் சிறந்து விளங்குதல், இயல், இசை, நாடகம் முதலான கலைகள் சிறப்புடன் விளங்குதல் முதலியவற்றை விவரிக்கிறது.*

***முக்கியச் சொற்கள்:*** *கம்பர், ஏரெழுபது, வேளாண்மை, உழவுக்கருவி, உழவுத் தொழில், திறனாய்வு, சிற்றிலக்கியம்.*

## முன்னுரை

எழுபது என்பது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகும் தண்டியலங்காரம் கூறும் முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலை என்னும் நான்கில் ஏரெழுபது இலக்கியம் தொகைநிலை என்னும் அடிப்படையில் அடங்குகிறது. பாட்டுடைத் தலைவனின் பெயர் ஊர் ஆகியவற்றைச் சிறப்பித்துக் கூறும் எண் செய்யுள் வகையில் எழுபது இலக்கியமும் அடங்குகிறது. அவ்வகையில் கம்பர் இயற்றிய ஏரெழுபது இலக்கியம் எழுபது பாடல்களைக் கொண்டு உழவுத் தொழிலின் சிறப்புகளை எடுத்துக் கூறுகிறது. இவ்விலக்கியத்தில் அமைந்திருக்கும் உழவுக் கருவிகளை ஆய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இலக்கிய அறிமுகம்

ஏரெழுபது கம்பரால் படைக்கப்பட்டது. காலம் கிபி 12ஆம் நூற்றாண்டு உழவுத் தொழில் செய்யும் வேளாளர்களின் சிறப்புகளையும் செயல்முறைகளையும் கம்பர் விரிவான நோக்கில் இலக்கியத்தில் எடுத்துக்காட்டியுள்ளார். கம்பராமாயணத்தில் சுவைகூட்டும் பண்புகள் பலவற்றையும் கொண்டு படைத்த கம்பர் செய்திகளின் களஞ்சியமாக ஏரெழுபது இலக்கியத்தைப் படைத்திருக்கிறார். நிலத்தைப் பக்குவப்படுத்துவது தொடங்கி நெல் அளக்கும் பணி வரை பல்வேறு செயல்களையும் நுட்பமான நோக்கில் எடுத்துக்காட்டியிருக்கின்றார்.

“கரடுமுரடாக உள்ள நிலத்தைச் சீர்திருத்துதல் தொடங்கி நெல் அளக்கும் பணி வரை ஒவ்வொன்றையும் விரித்துக் கூறும் முறையில் கம்பர் சிறந்து விளங்குகிறார்” என்று கதிர் முருகு கூறுவது குறிப்பிடத்தக்கது. (கதிர்முருகு, ஏர் எழுபது, என்னுரை). ஏரெழுபது இலக்கியம் கணபதி வணக்கம், மும்மூர்த்திகள் வணக்கம், கலைமகள் வணக்கம், சோழ மண்டலத்தின் சிறப்பு, சோழ நாட்டின் சிறப்பு, வேளாளர்களின் குடிப்பிறப்பு ஆகியவற்றை தொடக்கத்தில் பத்துப்பாடல்கள் பேசுகின்றன.

உழவின் சிறப்புகளை விவரிப்பனவாக அறுபத்து ஒன்பது பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

**இலக்கியத்தின் தோற்றத்திற்கான காரணம்**

உழவுத் தொழிலில் சிறப்பினைக் கூறும் ஏரெழுபது இலக்கியத்தின் தோற்றத்திற்கான காரணம் குறித்து செவிவழிச் கதை ஒன்று காணப்படுகிறது. கம்பர் குலோத்துங்க சோழனின் அவையில் இருந்தபோது குலோத்துங்க சோழன் சத்தமாகச் சிரித்ததைக் கண்ட கம்பர் சிரிப்பிற்கான காரணத்தை வினவினார். எங்களுக்கும் அதனைக் கூறினால் நாங்களும் மகிழ்ச்சியாக இருப்போம் என்று கூறியதைக் கேட்டு குலோத்துங்க சோழன் நீங்களும் நாட்டு மக்களும் எமக்கு அடிமை என்பதை நினைத்துச் சிரித்தேன் எனக்கூற, கம்பருக்கு மிகுதியான சினம் ஏற்பட்டது. மன்னனே நீயோ நாட்டின் அரசன் நானோ கவியரசன். உனக்கு நான் அடிமையாக முடியாது என்று கூறிக் கிளம்ப முற்பட்டார். அப்போது குலோத்துங்கசோழன் நீங்கள் புலவராக இருப்பது என்னுடைய அவையில் உங்களுக்கு வேறு இடத்தில் புகழ் கிடைக்காது என்று கூறியதும் கம்பருக்கு மிகுந்த சினம் வந்தது. நீ இல்லை என்றால் வேறு இடம் இல்லையா என்று கூறி மன்னவனும் நீயோ வளநாடும் உனதோ, என்ற பாடலைப் பாடிவிட்டுச் சபையில் இருந்து வெளியேறினார். நீண்ட தூரம் நடந்த களைப்பினால் நடக்க முடியாமல் நடந்து வந்த போது அவர் கண்ணில் வயல்வெளிக் காட்சி ஒன்று காணக் கிடைத்தது. அப்போது உழவனின் மனைவி உழுதுகொண்டிருக்கக்கூடிய தன்னுடைய கணவனுக்காகப் பழைய சோற்றை மோரில் கரைத்துக் கொண்டு வந்தாள். அவ்விடம் சென்ற கம்பர் பசியின் மிகுதியால் கை நீட்டினார் அதைக் கண்ட வேளாளன் பசியோடு இருந்த கம்பருக்கு உணவு கொடுத்தான். பசி நீங்கிய கம்பர் என்ன கைமாறு செய்யப் போகிறோம் என்று நினைத்துக் கவி ஒன்று பாடினார்.

**செட்டி மக்கள் வாசல் வழி செல்லலாமே செக்காரர்**
**பொட்டி மக்கள் வாசல் வழி போகோமே**
**முட்டிபுகும் பார்ப்பார் அகத்தை எட்டிப் பாரோமே**
**எந்நாளும் காப்பாரே வேளாளர் காண்**

என்னும் பாடலைப் பாடிவிட்டு அந்த இடத்தைவிட்டு நீங்கினார். சரியான காலத்தில் தனக்கு உணவு தந்த உழவனை நினைத்து மனம் நெகிழ்ந்தார். அந்த உணர்வின் வெளிப்பாடாக அமைந்தது ஏரெழுபது. நாட்டில் மழை பெய்தால் ஒழுக்கம் சிறப்பாக இருக்கும். இயல் இசை நாடகம் முதலியவை சிறக்கும் மக்களுடைய வாழ்க்கை வளம் பெற்று இருக்கும் என்னும் சிந்தனைகளை கம்பர் ஏரெழுபது இலக்கியத்தின் வாயிலாகப் பதிவு செய்திருக்கின்றார்.

**உழவுக் கருவிகள்**

வேளாண்மைத் தொழில் செய்யும் வேளாளர்கள் இலக்கியத்தில் சிறப்பிக்கப்படுகிறார்கள். அவர்கள் காராளர், பெருக்காளர், வளநாடர் எனப் பல்வேறு பெயர்களாலும் சிறப்பிக்கப்படுகின்றனர். ஏர் எழுபதில் கலப்பை, மேழி ஊற்றாணி, நுகத்தடி, நுகத்தொளை, நுகத்தாணி பூட்டான் கயிறு, கொழு கொழு ஆணி, தாற்றுக் கோல், மண்வெட்டி, எருக்கூடை, நெல் அளக்கும் கூடை, முதலான உழவு தொழிலோடு தொடர்புடைய கருவிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

**கலப்பை**

கலப்பை உழுவதற்குப் பயன்படும் கருவியாகும். மண்ணைச் சீர் செய்யவும் மண்ணைக் கீழ் மேலாகப் புரட்டுவதற்கும் பயன்படுவதாகும். கலப்பை எவ்வாறு மண்ணைக் கீழ் மேலாகப் புரட்டுகிறதோ அதைப் பொறுத்தே மக்களின் வாழ்க்கை வளமாக மாறும் என்று இலக்கியம் குறிப்பிடுகிறது. "மடை வாளை வரும்

பொன்னி வள நாடர் தங்கள் அலப்/ படைவாளைக்கொண்டன்றிப்பகையறுக்க மாட்டாரே" (ஏர் எழுபது. 3:3-4) வறுமை என்னும் பகையை அறுப்பதற்குக் கலப்பை ஒன்றே சிறந்த வழியாகும் என்பதைப் பாடல் அடிகள் நுட்பமாகப் பதிவு செய்துள்ளன.

**மேழி**

மேழி என்பது கலப்பையின் உறுப்பாகிய கொழுவைக் குறிக்கும். கலப்பையோடு சேர்ந்த இந்த பகுதி நிலத்தை ஆழமாக உழவு செய்வதற்குப் பயன்படுகிறது. உழவர்கள் உலகமே பெயர்ந்தாலும் சொன்ன சொல் மாறாதவர்கள். உலகில் நன்மைகள் அனைத்தும் நடைபெறுவது உழவர்களின் மேழியினால் அன்றி வேறு ஒன்றால் இல்லை என்பதை, "ஊழி பேரினும் பெயரா உரையுடைய பெருக்காளர்/மேழியால் விளைவதல்லால் வேறொன்றால் விளையாவே" (மேலது. 4:3-4) என்னும் அடிகள் எடுத்துக் காட்டுகின்றன.

**ஊற்றாணி**

கலப்பை, ஏர்க்கால் இரண்டையும் இணைக்கும் இயல்புடையது ஊற்றாணி. உலகிற்குஅச்சாணிபோன்றுஇதுபயன்படும் ஊற்றாணி சரியாக அமைந்தால் தான் உழவு சரியாக அமையும். அதன் வாயிலாக உலக மக்களின் வாழ்க்கை செல்வ வளம் பெற்று சிறப்பாக அமையும் என்று ஏரெழுபது குறிப்பிடுகிறது. "மாற்றாத காவேரி வளநாடர் உழுங்கலப்பை/ ஊற்றாணியுள தாயின் உலகு நிலைகுலையாதே" (மேலது. 5:3-4)

**நுகத்தடி**

நுகத்தடி என்பது உழவு மாடுகள் இரண்டையும் இணைக்கக்கூடிய நீளமான கட்டையாகும். உழுகின்றபோது இரண்டு மாடுகளும் ஒன்று போலச் செல்லச் வேண்டும், ஒன்றை ஒன்று இழுத்துக் கொண்டு சென்றால் உழவு சரியாக அமையாது. எனவே நுகத்தடி சம அளவில் அமைந்து இரண்டு மாடுகளையும் வழி நடத்திச் செல்லக் கூடியதாக அமையும். "உரையேற்ற செங்கதிரேசன் ஒளிநெடும் தேர் பூண்டகம்/திரையேற்ற கடலுலகிற் செறியிருளை மாற்றுவது" (மேலது. 6:1-2)

**நுகத்தொளை**

நுகத்தடியில் காளைகளை இணைப்பதற்கு இது பயன்படுகிறது. நுகத் தொளையில் கயிற்றைக்கொண்டு கட்டுவதன்மூலம். உழவு சரியான முறையில் செல்லும் என்று குறிப்பிடப்படுகிறது. "வளைத் திரைக்கடல் சூழ்ந்த வையகத்தோரெல்லார்க்குந்/ துளைத்துளை பசும்பொன்னின் அணி கிடக்குந் துளைத்தலால்" (மேலது, 7:1-2)

**நுகத்தாணி**

நுகத்தடி ஏர்க்கால் இரண்டையும் இணைப்பதற்குப் பயன்படுவது. உலகுக்கு அச்சாணியாக அமையும் இயல்பு உடையது நுகத்தாணி என்று சிறப்பிக்கப்படுகிறது. "ஓராணித் தேரினுக்கும் உலகங்களனைத் தினுக்கும் / பேராணிப்பெருக்காளர் பெருமைக்கு நிகருண்டோ" (மேலது. 8:1-2)

**பூட்டாங்கயிறு**

உழவுக்குப் பயன்படும் காளை மாடு களை நுகத்தடியில் இணைப்பதற்குப் பயன்படுகிறது. நூலாசிரியர் சோதிடக் கலையோடு சேர்த்து இக்கயிற்றின் சிறப்புகளை விவரிக்கிறார். சோதிடக்கலையில் பார்க்கும் வேதப்பொருத்தம் ரச்சுப்பொருத்தம் என்னும் இரண்டு கயிறுகளும் போற்றத் தக்கவை அல்ல. மணமகளின் மங்கலக் கயிற்றை விடவும் காளைகளையும் நுகத்தடியையும் இணைக்கும் கயிறுகள் போற்றுவதற்கு உரியவை என்று கூறியுள்ளார் "தீட்டுப் புகழ்ப் பெருக்காளர் செழுங்கத்தோ டுழும் பகடு / பூட்டுகின்ற கயிறிரண்டும் புவி மகள் மங்கலக் கயிறே" (மேலது. 9:3-4)

### கொழு

கலப்பையின் உழும் பகுதியில் நுனியில் இருப்பது கொழு - இது உழுவதற்கு பயன்படும். இதன் கூர்மையின் காரணமாக உழவுத் தொழில் சிறக்கும். அதன் காரணமாக நாட்டில் ஆட்சி முறையான செல்வம் வளம் ஆகியவை பெருகும் இவற்றுக்கெல்லாம் மூல காரணமாக விளங்குவது கொழு. "கோதை வேல் மன்னவர் தம் குடை வளமும் கொழு வளமே/ ஆதலால் இவர் பெருமை யார் உரைக்க வல்லாரோ" *(மேலது.11:3-4)*

### கொழு ஆணி

கலப்பை நுனியில் கொழுவை இணைக்கப் பயன்படுகிறது. இந்த ஆணி சரியாக அமைந்தால் உழவு சிறக்கும் உழவர்களின் வாழ்க்கையில் பெயர் புகழ் ஆகியன சிறக்கும். "மழை வாரி திங்கள் தோறும் பொழிந்தாலும்/ கெழுவார நில மடந்தை கீழ் நீர் கொண்டு எழுந்தாலும்" *(மேலது.12:1-2)*

### தாற்றுக்கோல்

உழவின்போது மாடுகளை அடித்து ஓட்டுவதற்குப் பயன்படும். இதன் நுனியில் ஆணி இருக்கும் மாடுகள் சரியான பாதையில் சென்றால் மட்டும் உழவு சிறக்கும். அவ்வாறே மக்கள் வாழ்க்கையும் நேர்மையான வழியில் செல்ல வேண்டும் என்பதை ஏர் எழுபது பதிவு செய்துள்ளது. "வெங்கோபக் களி கடந்து வேளாளர் விலை வயலுள் /பைங்கோல முடி திருத்தப் பார் வேந்தர் முடி திருத்தும்" *(மேலது.13: 1-2)*

### மண்வெட்டி

நிலத்தைப் பண்படுத்திச் சீர் அமைக்கப் பயான்படுவது. உழவுத் தொழில் சிறக்கவும் உழவர்களின் வாழ்வு சிறக்கவும் மண்வெட்டி பயன்படுகிறது "மட்டிருக்கும் திருமாது மகிழ்ந்து இருக்கும் பூமாது/முட்டிருக்கும் செல்மாரு முண்ணிருப்பார் முது நிலத்து" *(மேலது.22:1-2)*

### எருக்கூடை

வயல்களின் வளத்திற்குக் காரணமாக அமைவது எருக் கூடை எருவை அள்ளி வயலில் கொட்டுவதற்குப் பயன் படுகிறது. உரம் இடவில்லை என்றால் மனித வாழ்வில் செல்வம் பெருகாது. உழவர்கள் எருக்கூடை சுமந்தால் தான் மக்கள் வாழ்க்கை செழிக்கும். "அடுத்திறக்கிப் பெரும் கூடை அளவுபட வே எருவை /எடுத்து இறக்கி தலை மேலே கொண்டவர் தாம் இடை இடையே" *(மேலது.24:1-2)*

### நெல் அளக்கும் கூடை

வயலில் விளைந்த நெல்லை அறுவடை செய்த பின்பு அதனை அளப்பதற்குப் பயன்படக்கூடிய கூடை நெல் அளக்கும் கூடை எனப்படுகிறது. வறுமையால் வாடிய மக்களுக்கு நெல்லை அளந்து கொடுக்கவில்லை என்றால் உலக மக்களைப் பசி துன்புறுத்தும். அதனால் உழவர்கள் உழவுத்தொழிலைச் செம்மையாகச் செய்ய வேண்டும் என்பதை ஏரெழுபது குறிப்பிடுகிறது "பெருங்கழனிப் பெருக்காளர்/ கூடையானது கையில் கொண்டு களம் புகுந்திடினே" *(மேலது. 63:4)*

### முடிவுரை

ஏரெழுபது இலக்கியம் உழவுத் தொழில் செய்யும் வேளாளர்களின் சிறப்புகளையும் தொழில்முறையினையும் எடுத்துக்காட்டுகிறது. உழவுத் தொழில் நுட்பங்கள், உழவுக் கருவிகள், அவற்றைப் பயன்கொள்ளும் முறைகள், உழவுத் தொழிலால் உலகில் வறுமை நீங்கி வளம் பெருக்கும் தன்மை முதலியன எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

### துணை நூல் பட்டியல்

1. கதிர் முருகு, ஏரெழுபது. சென்னை, சாரதா பதிப்பகம், 2007.
2. www.wikipedia.com